சபரகமுவ மாகாண கல்வி திணைக்களம்

**சபரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வாரப் பாடசாலை**

**பாடம் - பொருளியல்**

**வாரம் - 01**

**தரம் - 13**

**தயாரிப்பு :- இரத்தினபுரி வலயக்கல்வி அலுவலகம்**

**தேர்ச்சி 07 –** பணம் மற்றும் விலை மட்டங்களின் நடத்தையை இனங்கண்டு பொருளாதாரத்தின் செயற்பாட்டுக்கு வங்கியமைப்பு பஙகளிக்கும் விதத்தினை ஆய்வு செய்வார்.

**தேர்ச்சி மட்டம் 7.1 –** பணம், பணத்தின் வகை மற்றும் பணத்தின் தொழிற்பாடுகளை ஆராய்வார்.

- **பணம்**
  பண்டங்களையும் சேவைகளையும் பரிமாற்றம் செய்து கொள்வதற்கான பரிமாற்று ஊடகமாக பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் எதுவும் பணமாக கருதப்படும்.

- **நல்ல பணம் ஒன்றின் பண்புகள்**

1. பொதுவாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருத்தல்.
2. நீண்ட காலத்துக்கு நிலைத்திருத்தல்.
3. ஓரினத் தன்மை.
4. சிறு அலகுகளாகப் பிரிக்கக் கூடியதாக இருத்தல்.
5. இலகுவாகக் கொண்டு செல்லக் கூடியாக இருத்தல்.
6. பெறுமதி நிலையானதாக இருத்தல்.
7. சட்ட ரீதியிலான அங்கீகாரம்.
8. பணத்தின் கிடைப்பனவு மிகையாகவோ மிகவும் குறைவானதாகவோ இல்லாதிருத்தல்.
9. போலிப் பணத்தை உருவாக்க முடியாதிருத்தல்.
10. இலகுவாக இனங்காணக் கூடியதாகவிருத்தல்.

**பயிற்சிகள்**

1. பணத்தின் பிரதான நான்கு தொழிற்பாடுகளையும் விளக்குக.
2. தற்காலத்தில் பயன்படுத்தப்படும் பணத்தின் வகைகள் ஐந்தைக் குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக விளக்குக.
3. கடனட்டைகள் ஏன் பணமாகக் கருதப்படுவதில்லை?